1981 மார்ச் 4]

அதே நேரத்தில் அந்த மாமியாரும் அந்தக் கணவனும், They are freely going about. அந்த நிலைமை இருக்கிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால், அப்படிப்பட்ட சம்பவங்கள் போலீஸ் கவனத்திற்கு வந்தவுடனே, at the first instance itself அந்த மாமியாரையும், கணவனையும் கைது செய்து பிறகு இன்வெஸ்டிகேஷன் நடத்துகின்ற முறையை ஏன் கையாளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டத்தில் குறை இருந்தால் திருத்தம் கொண்டு வரச் சொன்னதற்கு நன்றி. ஆனால் குற்றவாளிகள் தப்பிவிடுவதற்கு இந்த அரசு உடந்தையாக இருக்காது,

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, வரதட்சிணைக் கொடுமையைப் போக்குவதற்கு ஒரு யோசனையை அமைச்சருக்குச் சொல்லிக் கொள்கிறேன். நாட்டிலே பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் யோசனை சொல்லக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், தனியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்று சொல்லிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10—00)

பேரவையின் அனுமதியோடு, வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சிணைப் பிரச்சினையால் பல பெண்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த வரதட்சிணைப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள், கலப்புத் திருமணம் செய்து கொள்ள முன்வருபவர்களுக்கு இந்த அரசாங்கம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தைப் பொறுத்தவரையில், ஜாதியை விட்டு திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு முன்னுரிமை தரும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு அது இல்லை.

சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயரை மாற்றியமைத்தல்

*வினா எண் 365—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

"சென்னை உயர்நீதி மன்றம்" (Madras High Court) என்ற பெயரை "தமிழ்நாடு உயர்நீதி மன்றம்" (Tamil Nadu High Court) என்று மாற்ற அரசு ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை உயர்நீதி மன்றம் என்றபெயரை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்ற நடவடிக்கைகள் ஏதும் அரசால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் எல்லாம் உயர்நீதி மன்றத்தின் பெயர் அந்தந்த மாநிலங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. கேரளா உயர்நீதி மன்றம், கருநாடக உயர்நீதி மன்றம், ஆந்திரப் பிரதேச உயர்நீதி மன்றம் என்று இருக்கிறது. ஆகவே, சென்னை மாநிலம் என்று இருந்ததை தமிழ்நாடு என்று மாற்றப்பட்ட பிறகு, உயர்நீதி மன்றத்தின் பெயரையும், ''தமிழ்நாடு உயர் நீதி மன்றம்'' என்று அழைப்பதுதான் சரியாக இருக்கும். இனி மேலாவது, அப்படி பெயரை மாற்றுவதற்கு விரைவான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றம் 1862-ஆம் ஆண்டில் இந்தியன் ஹைக்கோர்ட் ஆக்ட் 1861—என்கிற சார்ட்டர்ட் ஆக்ட்—சட்டத்தின் அடிப்படையில் சென்னை, பம்பாய், கல்கத்தா, ஆகிய மூன்று மாநிலங்களில் உயர்நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டபோது நிறுவப்பட்டது. இதிலே இன்னொரு முக்கிய பிரச்சினை, சென்னை உயர்நீதி மன்றத்திற்கு யூனியன் டெர்ரிடரி ஆப் பாண்டிச்சேரி உயர்நீதி மன்றத்தின் அப்பல்லட் ஜூரிஷ்டிக்ஷன் இருப்பதால், அதன் பெயரை ஒரு மாநிலத்தின் பெயரைக் கொண்டு மட்டும் கூற முடியாது என்கிற காரணத்தால், இந்த மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, மதுரையிலே நம்முடைய உயர்நீதி மன்றத்தின் கிளை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்வியை ஒட்டியதல்ல என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே சென்னையில் சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் நிறுவுவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லை என்பதால் அனுமதி மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினா எண்கள் 374 மற்றும் 375 ஒத்தி வைக்கப்பெறுகின்றன. வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு)—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.

TRUTH ALONE TRIUMPHS